# அரூர் தேர்வுநிலைப் பேரூராட்சி
# தருமபுரி மாவட்டம்

<u>ந.க. எண்: 408/2022/த.எ</u> <u>நாள்:07.07.2022</u>

## <u>ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு</u>

தருமபுரி மாவட்டம், அரூர் தேர்வுநிலைப் பேரூராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2021–2022–ல் கீழ்க்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 28.07.2022 வியாழக்கிழமை மாலை 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் நேரில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு/ பரிசீலிக்கப்படும். முன்னதாக இவ்வலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை உரிய தொகை செலுத்தி 27.07.2022 தேதி புதன்கிழமை மாலை 3.00 மணிக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### <u>பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–22</u>

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி படிவம் | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 5 | 6 | 7 |
| 1 | வருவாய் கோட்டாட்சியர்அலுவலகம் எதிரில் உயர்மின்கோபுர விளக்கு அமைத்தல். | 3.50 | 7000 | 1770 | 60 நாட்கள் |
| 2 | வார்டு எண்.10 தாஸ் தியேட்டர் எதிரில் உயர்மின்கோபுர விளக்கு அமைத்தல். | 3.50 | 7000 | 1770 | 60 நாட்கள் |

### <u>நிபந்தனைகள்</u>

1. பணிசெய்ய உத்திரவு கிடைத்த 3 நாட்களுக்குள் ஒப்பந்ததாரர் ரூ.20 மதிப்புள்ள முத்திரைதாளில் ஒப்பந்த பத்திரம் எழுதி கையொப்பமிட்டு ஒப்படைக்கவேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் பணியினை முழுமையாக முடிக்க வேண்டும். தவறினால் மதிப்பீடு ரூ.1,00,000/– க்கு நாள் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் அபராதம் விதித்து பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். மேலும், பணி உத்திரவு ரத்து செய்து மறு ஒப்பந்தபுள்ளிகள் வரவழைக்கவோ நேரிடும்.
3. பணியினை துவக்கும் முன் பொறியாளருக்கும் செயல் அலுவலருக்கும் பணி மேற்பார்வையாளர்க்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
4. பணிகளை பொறியாளர் அளவீடு செய்து உதவிசெயற்பொறியாளர்/செயற்பொறியாளர் அளவு மேலாய்வு செய்து மேலொப்பம் வழங்கிய பின்பு உரிய பிடித்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பின் பட்டியல் வழங்கப்படும்.
5. பட்டியல் தொகையில் வருமான வரி, ஜிஎஸ்டி மற்றும் கூடுதல் டேவணித் தொகை விதிமுறைகளின்படி பிடித்தம் செய்யப்படும்.
6. பணிக்கு தேவைப்படும் பொருட்கள் அனைத்தும் பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்ததாரரே மேற்படி பொருட்கள் வாங்கி பயன்படுத்தி கொள்ளலாம்.
7. பணிகள் நல்ல தரமுள்ளதாக இருத்தல் வேண்டும்.
8. பணிகள்,பேரூராட்சி பொறியாளர் மேற்பார்வையில் செய்யப்பட வேண்டும்.

9. பணிகள் செய்து முடிக்கப்பட்ட 3 வருட காலத்திற்குள் ஏதேனும் சேதம் (Damage) ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே தன்சொந்த செலவில் செய்து கொடுத்தல் வேண்டும்.
10. ஒப்பந்ததாரர் பணிகள் ஒவ்வொரு நிலையிலும் கண்டிப்பாக பொறியாளர்களின் தகவல் தெரிவித்த பின்னரே தொடங்க வேண்டும் பணிகள் தொழில்நுட்ப உதவியாளர் நேரடி பார்வையில் பணிகள் செய்ய வேண்டும்.
11. வேலை முடிந்த பின்னர், பணிக்குறிய காப்பீட்டு தொகை 2%பிடித்தம் செய்து நிகர பட்டியல் தொகை வழங்கப்படும், செய்யப்பட்ட பணியில் மழை மற்றும் கோடைகாலங்கள் சேர்த்து ஒரு வருட இடைவெளியில் பணிகளில் பழுதுகள் இருப்பின் இக்காப்பீட்டு தொகையில் இருந்து பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர்களால் தவறாமல் செய்யப்படவேண்டும்.
11. பணிகளை துவக்கு முன் நடைபெறும் பொழுது மற்றும் பணிமுடிந்த என மூன்று நிலைகளில் புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும். மேலும் எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை (Same Angle) சுட்டிக்காட்டும் படியாக இருத்தல் வேண்டும்.
12. பணியிடத்தில் ஒப்பந்ததாரால் குவித்து வைக்கப்படும் பொருட்கள் மற்றும் ஒப்பந்ததாரால் தோண்டப்படும் பள்ளம் ஆகிவற்றால் எவ்வித விபத்து ஏற்படினும் அதற்கு ஒப்பந்தாரரே முழுபொறுப்பு.
13. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பிறழாமல் பணிகள் முடிக்கப்பட வேண்டும்.
14. பணிகள் துவங்கும் போதும் செயல்பாட்டிற்கு வரும்போதும் பாராளுமன்றஉறுப்பினர் அவர்களின் முன்னிலையில் துவக்கப்படவேண்டும்.
15. பாராளுமன்ற உறுப்பினர் பெயர் மற்றும் பணியின் விவரங்கள் அடங்கிய இரும்பால் செய்யப்பட்ட அல்லது கல்லால் ஆன ஒரு பெயர் பலகையை நிரந்தரமாக இருக்கும் வகையில் கண்டிப்பாக நிறுவப்பட வேண்டும்.
16. பணிகள் முடிக்கப்பட்ட பின் திட்ட நிதி பெறப்பட்டவுடன் மட்டுமே பட்டியல் தொகை வழங்கப்படும்.

**(ஒம்) த.இந்திராணி**
**தலைவர்**
**தேர்வுநிலைப் பேரூராட்சி,**
**அரூர், தருமபுரி மாவட்டம்.**

**(ஒம்) ஆர்.கலைராணி**
**செயல் அலுவலர்**
**தேர்வுநிலைப் பேரூராட்சி,**
**அரூர், தருமபுரி மாவட்டம்.**

<u>பெறுதல்</u>

பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
தேர்வுநிலைப் பேரூராட்சி,
அரூர், தருமபுரி மாவட்டம்.

<u>நகல்:—</u>

1. பேரூராட்சி உதவி இயக்குநர் தருமபுரி மண்டலம் மாவட்ட ஆட்சியரகம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் தருமபுரி.
3. இளநிலை பொறியாளர், அரூர் பேரூராட்சி தொகுப்பு.
4. அலுவலக அறிவிப்பு பலகை விளம்பரம் செய்யும் பொருட்டு.